www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10×1=10

1) யாருடைய ஆட்சியின்போது சீனத்துறவி யுவான்சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார்?
 அ) இரண்டாம் சந்திரகுப்தர் ஆ) மகேந்திர பல்லவன்
 இ) முதலாம் நரசிம்மபல்லவன் ஈ) ஹர்ஷ வர்த்தனர்

2) _______ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்
 அ) நெசவு ஆ) எஃகு இ) மின்சக்தி ஈ) உரங்கள்

3) ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம்/நகரங்கள்
 அ) சூரத் ஆ) கோவா இ) பம்பாய் ஈ) மேற்கண்ட அனைத்தும்

4) 1744 ஆம் ஆண்டு வரை கிழக்கிந்திய கம்பெனியின் முதன்மை குடியிருப்பாக இருந்தது எது?
 அ) வில்லியம் கோட்டை ஆ) புனித டேவிட் கோட்டை
 இ) புனித ஜார்ஜ் கோட்டை ஈ) இவற்றில் எதுவுமில்லை

5) பருவமழை பொய்ப்பின் காரணமாக _______ ஏற்படுகிறது
 அ) ஆவிசுருங்குதல் ஆ) வறட்சி இ) ஆவியாதல் ஈ) மழைப்பொழிவு

6) இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் _______ தொழிலகங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
 அ) வேளாண் சார்ந்த ஆ) கனிம வளம் சார்ந்த
 இ) வனப்பொருட்கள் சார்ந்த ஈ) கடல் வளம் சார்ந்த

7) கூற்று:- ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.
 காரணம்:- அவர்கள் இந்தியாவில் கோடை காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்
 அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
 இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
 ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

8) கல்கூர்லி சுரங்கம் _______ கனிமத்திற்கு புகழ்பெற்றது
 அ) வைரம் ஆ) பிளாட்டினம் இ) வெள்ளி ஈ) தங்கம்

9) உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?
 அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

10) சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம் எது?
 அ) டிசம்பர் ஆ) ஜனவரி இ) மார்ச் ஈ) மே

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:-** 5×1=5

11) _______ ஐரோப்பாவிற்கும், இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது.
12) 1919ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் _______ அறிமுகப்படுத்தியது
13) வங்கித்துறை என்பது _______ பொருளாதார நடவடிக்கையாகும்.
14) ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் மரம் _______
15) கட்டாய குறியீடுகள் _______ வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்

**III. பொருத்துக:-** 5×1=5

| | | |
|---|---|---|
| 16) எலினார் ரூஸ்வெல்ட் | - | உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம் |
| 17) சைரஸ் சிலிண்டர் | - | 1997 |
| 18) பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் | - | அடிமைத் தனத்திலிருந்து விடுதலை |
| 19) குழந்தை உதவி மைய எண் | - | மனித உரிமைகளுக்கான ஆணையம் |
| 20) அரசியல் உரிமை | - | 1098 |

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



IV. சரியா/தவறா எனக் குறிப்பிடுக:- 5×1=5

21) நாளந்தா ஒரு சிறந்த வேதக் கல்வி மையமாக இருந்தது
22) இந்தியா பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு புகழ் வாய்ந்தது
23) வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது
24) மதராஸ் 1998இல் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.
25) இரு சக்கர வண்டியில் ஒருவர் மட்டுமே பின் இருக்கையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள்.

V. வேறுபடுத்துக:- 3×2=6

26) வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி
27) பெரிய அளவிலான தொழிலகங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழிலகங்கள்
28) மேற்கு அண்டார்டிகா மற்றும் கிழக்கு அண்டார்டிகா
29) பெரிய பவளத்திட்டு மற்றும் ஆர்டீசியன் வடிநிலம்

VI. காரணம் கூறுக:- (இரண்டு மட்டும்) 2×2=4

30) எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது ஏன்?
31) வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் அமைந்துள்ளன
32) அண்டார்டிகா ஆராய்ச்சியாளர்களின் கண்டம் என அழைக்கப்படுகிறது

VII. சுருக்கமான விடையளி (பத்து வினாக்களுக்கு மட்டும்):- 10×2=20

33) காந்தியடிகளின் வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன?
34) இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை?
35) நகர்ப்புற பகுதி என்றால் என்ன?
36) மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக
37) அபாயகரக் கழிவுகள் பற்றி குறிப்பு எழுதுக?
38) தொழிற்சாலை - வரையறு
39) தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக
40) ஆப்பிரிக்காவின் முக்கியமான ஆறுகள் யாவை?
41) அண்டார்டிகா கண்டத்தின் தன்மை குறித்து எழுதவும்?
42) மனித உரிமைகள் என்றால் என்ன?
43) அரசியல் உரிமைகள் சிலவற்றைக் குறிப்பிடுக
44) சாலை பாதுகாப்பினை நீவிர் எவ்வாறு உறுதி செய்வாய்?
45) ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக?

VIII. விரிவான விடையளி (ஏழு வினாக்களுக்கு மட்டும்):- 7×5=35

46) கோத்தாரி கல்விக்குழுவின் முக்கியமான பரிந்துரைகளைச் சுட்டிக் காட்டுக
47) தோட்டத் தொழில்கள் பற்றி விரிவாக எழுதுக?
48) இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது எப்படி?
49) நிலச்சரிவிற்கான காரணங்கள் குறித்து விரிவாக எழுதுக?
50) தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளைக் விளக்குக?
51) ஆஸ்திரேலியாவின் கனிம வளங்கள் குறித்து விரிவாக எழுதவும்
52) ஆப்பிரிக்காவின் இயற்கைப் பிரிவுகளை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்கவும்
53) மனித உரிமைகளின் ஏதேனும் ஐந்து அடிப்படைப் பண்புகளை விவரி?
54) சாலை விபத்துக்கான காரணங்களை விவரி?
55) சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

IX. இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:- 5×1=5

56) 1. பம்பாய் 2. கான்பூர் 3. குல்டி 4. இந்தியப் பெருங்கடல் 5. அகமதாபாத்

X. ஆப்பிரிக்கா வரைபடத்தில் குறிக்கவும்:- 5×1=5

57) 1. அட்லஸ் மலை 2. சஹாரா 3. சூயஸ் கால்வாய்
4. கிளிமஞ்சாரோ சிகரம் 5. அட்லாண்டிக் பெருங்கடல்

********

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com